# பாரதியார் சிந்தனைகள்




பதிப்பாசிரியர்கள்

முனைவர் இரா.கார்த்திகேயன்
முனைவர் ஆ.மகாலட்சுமி
முனைவர் த.கீதாஞ்சலி
முனைவர் மு.நவமணி
முனைவர் எஸ்.மீனாம்பிகை
தேசமான்ய த.தர்மகுலசிங்கம்

* பாரதியார் கவிதைகளில் சமத்துவ சமுதாயம்
திருமதி. சா.ஜெய சத்யா 185

* ஒப்புமை நோக்கில் பாரதியார் மற்றும் பெரியாரின் பெண்ணியச் சிந்தனைகள். 193
சா.யோக பிரியா

* பாரதியார் கவிதைகளில் உற்சாகமும் நம்பிக்கையும்
முனைவர் கு.லிங்கமூர்த்தி 204

* பாரதி படைப்பில் பன்முகச் சிந்தனைகள்
முனைவர் த.ராதிகா லட்சுமி 212

* பாரதியாரின் கடிதங்கள் - பன்முகப் பார்வை
மா. தங்கவைஷ்ணவி 219

# பாரதி படைப்பில் பன்முகச் சிந்தனைகள்

முனைவர் **த.ராதிகா லட்சுமி**
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி

தமிழ்நாட்டின் எட்டயபுரத்தில் பிறந்து நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல் என்ற கொள்கையோடு கவிஞனாக வாழ்ந்தவர் சுப்பிரமணிய பாரதியார். இவர் நாமகளின் திருவருளால் சொல்வளத்தில் சிறந்தாரே தவிர திருமகளின் திருவருள் கிடைக்காததால் வாழ்நாள் முழுவதும் வறுமையில் வாடி தவித்தார். பாரதி படைப்புகளில் தேசப்பற்று, பிரபஞ்ச சக்தி, தெய்வம் எங்கே?, இறைவேண்டல், ஒளி குறித்த வருணனை, பெண் முன்னேற்றம் யந்திரங்களின் வளர்ச்சி, மற்றும் காலனை மதித்தலும், மிதித்தலும் போன்ற சிந்தனைக் களங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தேசப்பற்று:**

சுப்பிரமணிய பாரதியார் மானிடத்தேவைகள் அனைத்திலும் மிக முக்கியமான சுதந்திரத்திற்காக அதிகமாகப் போராடுகிறார். இதற்காக போற்றுவதற்குரிய சுதந்திரதேவியின் பாதத்தில் எத்தகைய தியாகத்தைப் புரியவும் தயாராக இருக்கிறார். நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை என வருத்தமுற்றப் பாட்டிலும் ஒவ்வொரு இந்தியனின் மனதிலும் சுதந்திர தாகத்தை உருவேற்ற முயலுகிறார்.

தேவி! நின்னொளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ ? செம்மை
அறிவுண்டோ ? ஆக்க முண்டோ ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ ?
பாவிய ரன்றோ நிந்தன்
பாலனம் படைத்தி லாதார்?

சுதந்திர தேவியின் துதி என்ற பாடலில் தேசம், உயிர், அறிவு, ஆக்கம், காவியநூல்கள், கலைகள் என அனைத்தும் வேண்டுமென்றால் சுதந்திரம் வேண்டும் என்று தேசபக்தியை ஒவ்வொரு இந்தியரின் மனதிலும் விதைக்க முற்படுகிறார். அச்சமில்லை! அச்சமில்லை! என்று அச்சத்தை நீக்கும் தாரக மந்திரத்தை முழங்குகிறார்.

**ஜெயமுண்டு பயமில்லை மனமே!**
**இந்த ஜன்மத்திலே விடுதலையுண்டு**

என நம்பிக்கையை மனதில் துளிர்விடச் செய்கிறாா மகாகவி.

பிரபஞ்ச **சக்தி** :

பாரதியார் பிரபஞ்சத்தைச் சக்தியின் வடிவமாக நோக்கியவர். துன்பமில்லா நிலை, தூக்கமில்லாத கண் விழிப்பு, அன்பு கனிந்த கனிவு, இன்பமுதிர்வு, முக்திநிலையின் முடிவு, சொல்லில் விளங்கும் சுடர், தெய்வத்தை எண்ணும் நினைவு, பாட்டினில் வந்த களிப்பு, வாழ்வைப் பெருக்கும் மதி, மாநிலம் காக்கும் மதி, ஊழ்வினை நீக்கும் உயர்வு, உள்ளத்தில் ஒளிரும் விளக்கே சக்தி என்று சக்தியின் வடிவங்களை மனக்கண்ணில் நிறுத்துகிறார். இச்சக்தியிடமே பாரதியார் காணிநிலம் வேண்டும் என்றும், மோகத்தைக் கொன்றுவிடு என்றும் தன் வேட்கைகளை முறையிடுகிறார்.

விசையுறு பந்தினைப்போல் - உள்ளம்
வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்
அசைவறு மதிகேட்டேன் இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?

என்று வினா தொடுக்கும் அளவிற்கு பாரதி பிரபஞ்ச சக்தியிடம் நெருக்கமானப் பிணைப்பைக் கொண்டிருக்கிறார். இவ்வுலகத்தை இயக்கும் சக்தியின் மேல் பாரதிக்கு இருந்த நிலைப்பாடு புலனாகின்றது.

இயற்கையையும், ஐம்பூதங்களையும் சக்தியாக காணும் பாரதியார் ஓரிடத்தில் இவை அனைத்தும் மாயைகளோ? என்று தளர்ந்து போனதை நிற்பதுவே நடப்பதுவே பாடலில் காணமுடிகிறது. சொற்பனங்களாக, தோற்ற மயக்கங்களாக, அற்பமான மாயைகளாக, கானல்நீராக, காட்சிப்பிழைகளாக , கண்முன் உள்ள காட்சிகள் மறைந்து தோன்றுவது ஏன்? என உலகை நோக்கி வினவுகிறார்.

காண்பதுவே உறுதி கண்டோம்
காண்பதல்லால் உறுதி இல்லை
காண்பது சக்தியாம் இந்தக்காட்சி நித்தியமாம்

என்ற இறுதியடிகளின் வாயிலாக உலகின் இயக்கமாக சக்தியைக் காண்பது உறுதி என பாரதியார் கூறுவது திண்ணம்.

**தெய்வம் எங்கே?:**

பக்தியையும். மனிதாபிமானத்தையும் இணைத்து நோக்கிய பார்வையால் மகாகவியுமே உழைப்பவர்களிடத்தில் தெய்வத்தின் திருவுருவைக் காண முற்படுகின்றார்.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்தி ரங்கள் வகுத்திடு வீரே
கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே
கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே!

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயி ரந்தொழில் செய்திடு வீரே!
பெரும்பு கழ்நுமக் கேயிசைக் கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!

என்று பாரதியார் பிரமதேவனின் கலையாக தொழில் செய்பவர்கள் இருப்பதாக பாடுகிறார்.

**இறைவேண்டல்:**

பாரதியார் இறைவனை நேசித்தவர். ஆன்மீக ஈடுபாடு கொண்டவர். இவர்

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லனவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

என்பதில் எண்ணங்களின் தோற்றுவாய், உழைப்பு, விடாமுயற்சி, வைராக்கியம், நற்சிந்தனைக்கான நல்லறிவு போன்றவற்றை நல்கும்படி இறைவனிடம் இறைஞ்சுகிறார்.

**ஒளி குறித்த வருணனை:**

ஒளியே நீ யார்?
ஞாயிறின் மகளா?

அன்று நீ ஞாயிற்றின் உயிர். அதன் தெய்வம் ஞாயிற்றின் வடிவம் என்பது ஒரு உடல். ஒளியாகிய நீ தான் உயிர்? உன் தோற்றம் எப்போது? உன்னை யார் படைத்தார்? நீ அறிவின் மகளா? உறங்கிக் கிடக்கும் தெளிவா? உனக்கும், வானவெளிக்குமான பழக்கம் எத்தனை காலம்? எத்தகைய அன்பு? எவ்வாறு வானவெளியில் இரண்டறக் கலக்கிறாய். உன்னைப் படைத்த விந்தைக்கரிய மோஹினியைத் தொழுகிறோம் என பாரதியார் ஒளியைக் கண்டு வியப்படைந்து வினாக்களைத் தொடுக்கிறார். இறுதியில் சக்தியே ஒளியைப் படைத்ததாகக் குறிப்பிட்டு தலைவணங்குகிறார்.

**பெண்முன்னேற்றம்:**

பெண்டாட்டி தனையடிமைப் படுத்த வேண்டிப்
பெண் குலத்தை முழுதடிமைப் படுத்தலாமா?

என்று கேட்டதுடன் பெண்ணடிமையுற்றிருப்பதால் இந்திய மக்களும் அடிமையுற்றிருப்பதில் வியப்பில்லை. வீட்டிலுள்ள பழக்கமே நாட்டில் இருப்பது இயல்பு. அதனால் வீட்டில் பெண்களின் அடிமை நிலை மாறவேண்டும் என்று பாரதியார் **தாய் மாண்பு** என்னும் கவிதையில் பாடியுள்ளார்.

**யந்திரங்களின் வளர்ச்சி:**

இன்றைய உலகின் தவிர்க்க முடியாத இயக்கச் சாதனங்களாக தொழில் வளர்ச்சியையும், எந்திரங்களையும் குறிப்பிடலாம். சுப்பிரமணிய பாரதியார் கைத்தொழில் போற்று என்றும் கூடித்தொழில் செய் என்றும் புதிய ஆத்திச்சூடியில் இயற்றியுள்ளார். பாரததேசம் என்ற பாடலிலே பல தொழில்கள் குறித்துப் பாடுகிறார்.

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்,
ஆலைகள் வைப்போம்,கல்விச் சாலைகள் வைப்போம்
வானையளப் போம், கடல் மீனையளப்போம்
சந்திர மண் டலத்தியல் கண்டு தெளிவோம்

குடைகள், உழுபடைகள் , இரும்பாணிகள், வண்டிகள், கப்பல்கள் செய்வோம் என்று தொழிலுக்கு வந்தனை செய்கிறார். இன்று சந்திர மண்டலத்தில் விண்கலம் ஏவி விடுதலை எதிர்நோக்கி அன்றே பாடியுள்ளார். புதிய இந்தியாவிலே கைத்தொழிலின் வளர்ச்சி , தொழில் செய்ய யந்திரங்கள் , அவற்றை இயக்கும் மனிதர்களின் அறிவு வளர்ச்சி சிறக்கவேண்டும் என ஆசைப்பட்டார். மேலும் எதிர்காலத்தை நோக்கி குறி சொல்லும் விதத்திலே

குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது
தொழில் பெருகுது தொழிலாளி வாழ்வான்
சாத்திரம் வளருது: சூத்திரம் தெரியுது:
யந்திரம் பெருகுது: தந்திரம் பெருகுது

என புதிய கோணங்கி பாடலில் தொழில் வளர்ச்சியையும், தொழிலாளியையும், யந்திரங்களையும் குறித்து பேரானந்தத்தோடு பாடுவதை உணரமுடிகிறது. 1916 ஆம் ஆண்டு பாரதியார் எழுதிய புதிய உயிர் என்ற கட்டுரையிலே உலகம் மேன்மையுற கைத்தொழில்கள் பெருகவேண்டும், இவற்றில் சாத்தியமில்லை என்றுரைப்பதில் பயனில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஜப்பான் தொழிற்கல்வி என்ற கட்டுரையிலே நம் இந்தியப் பிள்ளைகளை ஜப்பானிற்கு அனுப்பி பலவிதமான தொழில்களும், சாஸ்திரங்களும் கற்றுக் கொள்ளும்படி செய்யவேண்டும். மேலும் கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போரும் உண்மையான தேசபக்தரே என குறிப்பிட்டிருப்பதில் பாரதியின் தேசபக்தியை அறியமுடிகிறது.

**காலனை விரும்புதலும், எதிர்த்தலும்:**

மரணம் என்பது ஒவ்வொரு உயிர்களுக்கும் ஏற்படக்கூடியது. தவிர்க்கமுடியாதது என பாரதியார் பல பாடல்களில் குறிப்பிட்டிருப்பினும்,

பார் மீது நான்சாகா திருப்பேன் காண்பீர்
சாவினை வேண்டேன் தவிர்ப்பாய் போற்றி

என்பதில் பாரதியார் மரணபயத்தைத் தவிர்க்க விரும்புபவராகவும், சாகாவரத்தைத் தெய்வத்திடம் கேட்பவராகவும் காணப்படுகிறார். இதன் பொருட்டே பாரதியார் தமது இறுதியாண்டுகளின் போது மரணம் என்ற சிந்தனையில் உழன்று அலைக்கழிக்கப்பட்ட காலத்தில் காலனுக்கு உரைத்தல் என்ற பாடலில்,

காலா உன்னைச் சிறுபுல்லென மதிக்கிறேன் - என்றன் காலருகே வாடா! சற்றே உன்னை மதிக்கிறேன்என்று காலனின் மீது வெகுண்டெழுகிறார்.

**தொகுப்புரை:**

மகாகவி பாரதியார் ஒவ்வொரு இந்தியரிடத்தும் தேசப்பற்றை உருவாக்கவும், மனித மனதின் எண்ணங்களில் தெளிவை ஏற்படுத்தவும் விழைந்தார். பிரபஞ்ச சக்தியிடம் பாரதி உரிமையுடன் வினாக்களைத் தொடுக்கிறார். தெய்வத்தை உழைப்பாளரிடத்தில் வெவ்வேறு கோணங்களில் நோக்குகின்றார். மனித குலப்பண்புகளை மேம்படுத்த இறைவனிடம் வேண்டுவதிலும், இயற்கையை ரசிப்பதிலும், பெண் முன்னேற்றத்திலும் சிறந்த சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார். யந்திரங்களின் வளர்ச்சியை நாட்டின் முன்னேற்றப் பார்வையில் பாரதி நோக்குகிறார், வாழ்வில் தன் விருப்பங்கள் நிறைவேறாத பாரதியார் காலனை மிதிக்க எண்ணுகிறார். பாரதியார் உலக அரங்குக்குள் போக வாய்ப்பேதும் கிட்டாத. வறுமையில் வாடினும் மிடுக்கான தமிழகக் கவிஞனாக வாழ்ந்து மறைந்தார். பாரதியின் பாடல்கள் எழுச்சி மிக்கதாக, கோபத்துடன் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்குக் காரணம் அவர் வாழ்ந்த சூழலேயாகும். மகாகவி பாரதியார் தன்னம்பிக்கையுடன் உலகை எதிர்நோக்கி வழிகாட்டுபவராக திகழ்ந்தார் என்பதில் ஐயமில்லை.

**துணைநூல்கள்:**

1. பாரதியார் கவிதைகள் - ஸ்ரீ செண்பகா பதிப்பகம்
2. பாரதியார் கட்டுரைகள் - பாரதி புத்தக நிலையம்
3. பாரதி என்றென்றும் - தொகுப்பாசிரியர் பொன்னீலன்
4. இலக்கியக் கோட்பாடுகள் நோக்கில் பாரதி படைப்புக்கள் - பதிப்பாசிரியர்கள் முனைவர் அ.பிச்சை, முனைவர் பா. ஆனந்தகுமார்
5. மகாகவி பாரதி பற்றி சோவியத் அறிஞர்கள் - பதிப்பு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
6. மகாகவி பாரதியார் - வ.ரா.